## ஏப்ரல் 21

## *புனித அன்செல்ம் (1033 – 1109)*

இவர் 27-வது வயதில் சந்நியாசியாகி மடத்தின் உபதலைவராகவும் பின் அதிபதியாகவும் ஆனார். மடத்தின் வேலைகளைக் கவனிக்கும்படி இவர் பல முறை இங்கிலாந்து போக வேண்டியிருந்தது. எனவே, அங்கு இவரை அநேகர் அறிந்திருந்தனர். காந்தப்பரி பேராயர் இறந்ததும் இவரை பேராயராக நியமித்தார்கள். இவர் காலத்தில் இங்கிலாந்தை ஆண்டு வந்த மன்னன் திருச்சபைக்கு பெருத்த அநீதி இழைத்ததால், ஆயர் அவனை எதிர்த்தார். அவனது கடுங்கோபத்திற்கு ஆளானார். இதனால் உரோமைக்குச் சென்று ஒரு மடத்தில் சில காலம் வாழ்ந்தார். இங்கிலாந்து நாட்டின் மன்னனை திருச்சபைக்கு புறம்பாக்க தீர்மானித்த பாப்பானவரை இவர் தமது மன்றாட்டுக்களால் தடுத்தார். இவர் பல இடங்களுக்கு பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. நேரத்தை வீணாக்காமல் பல அரிய நூல்களை எழுதினார். மன்னன் இறந்ததும் இவர் இங்கிலாந்துக்கு திரும்பினார். புதிய மன்னனும் இவருக்கு ஓயாது தொல்லை கொடுத்தான். “கிறிஸ்துநாதர் தம் இரத்தத்தை வடித்து திருச்சபைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். அந்த சுதந்திரத்தை அவர் மிக மிக நேசித்தார்” என்று இவர் அடிக்கடி சொல்லுவார். கடின உழைப்பின் மத்தியிலும் கடவுளின் பிரசன்னத்தை இவர் மறந்ததில்லை. திருச்சபையின் உரிமைகளை மன்னர்கள் பறிக்க முயன்றால் இவர் தம் சுகவசதிகளைக் கவனியாது போராடுவார்.

### சிந்தனை:

“ஓ! எங்கள் இறைவனாகிய ஆண்டவரே! நாங்கள் எங்கள் முழு உள்ளத்தோடு உம்மை ஆசிக்கும் வரம் தாரும். ஆசித்து உம்மைத் தேடிக்கண்டு பிடிக்கவும், கண்டு பிடித்து உம்மை நேசிக்கவும் உம்மை நேசித்து பாவத்தை நிந்திக்கவும் எங்களுக்கு வரம் தாரும்”. (புனித அன்செல்ம்)

### செபம்:

ஆண்டவரே, திருச்சபையை உம் கண்ணின் மணியைப் போல் காப்பீராக!.